வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி : 01.03.2026 நேரம் : இரவு 7 மணி

-----------------------------------------------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று புதுச்சேரியில், 2700 கோடி ரூபாய் மதிப்பிலான, கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகளை தொடக்கி வைத்தார்.
- சுகாதாரத் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதன் மூலம், மருத்துவ சுற்றுலா மையமாக புதுச்சேரியை, மாற்ற முடியும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி, தெரிவித்தார்.
- வளைகுடா நாடுகளில் நிலவும் பதற்றமான சூழலை அடுத்து, இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அந்நாடுகளின் தலைவர்களை, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.
- செயற்கை நுண்ணறிவு, மின்னணு உற்பத்தி உள்ளிட்ட துறைகளில், நாடு, அதிவேக வளர்ச்சி அடைந்து வருவதாக, மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

----------------------------

<u>மோடி புதுச்சேரி 1 (19)</u>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று புதுச்சேரியில், 2700 கோடி ரூபாய் மதிப்பிலான, கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகளை, காணொளிக் காட்சி மூலம் தொடக்கி வைத்து, உரையாற்றினார். லாஸ்பேட்டை ஹெலிபேட் மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர், ஆன்மீக சுற்றுலா, சுற்றுச்

சூழல் சுற்றுலா, மற்றும், சுகாதார சுற்றுலாவில் முதலீடுகள் செய்வதன் மூலம், புதுச்சேரியை உயர்ந்த நிலைக்கு அரசு கொண்டு செல்வதாகவும், புதுச்சேரியில் தனிநபர் வருமானம் உயர்ந்து வருவதாகவும், குறிப்பிட்டார். நாடு முழுவதும், உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பை உருவாக்க, உயர் முன்னுரிமை அளிக்கப் படுவதாகவும், இந்த ஆண்டு மத்திய பட்ஜெட்டில் இதற்கென 12 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளதாகவும், திரு. மோடி தெரிவித்தார். இரட்டை எஞ்சின் அரசு மூலம், வரும் 2047ஆம் ஆண்டுக்குள், வளர்ச்சி அடைந்த புதுச்சேரியை உருவாக்குவோம் என்று பிரதமர் தெரிவித்துள்ளார். மேலும், மத்திய-மாநில அரசுகள் இணைந்தால், எவ்வளவு சிறப்பாக செயல்பட முடியும் என்பதற்கு, புதுச்சேரியே சிறந்த உதாரணம் என்றும் அவர் கூறினார். விழாவில், ஆயிரத்து 142.23 கோடி ரூபாய் மதிப்பிலான 19 திட்டங்கள் தொடக்கி வைக்கப்பட்டன. பிரதமரின் மின்சார பேருந்துகள் சேவை முன்முயற்சியின் கீழ், இ-பஸ்கள் அறிமுகப் படுத்துதல், பொருளாதாரத்தில்

_மோடி புதுச்சேரி 2 (4)_

பின்தங்கியவர்களுக்கான குடியிருப்புகள், மற்றும், புதுச்சேரி அரசின் முக்கிய கழிவுநீர், மற்றும், நீர்வழங்கும் திட்டங்கள் உள்ளிட்டவை, இதில் அடங்கும். பிரதமரின் மின் பேருந்து சேவை முன் முயற்சியின் கீழ், மின்சார பேருந்துகள் அறிமுகப் படுத்துவது குறித்து, பிரதமர் கூறுகையில்....

(வாய்ஸ்-மோடி)

_மோடி புதுச்சேரி 3 (15)_

தொடர்ந்து பேசிய பிரதமர், புதுச்சேரி-சென்னை இடையே நடைபெற்று வரும் தேசிய நெடுஞ்சாலைப் பணிகள், முடியும் தருவாயில் உள்ளது என்றும், இதனால், இரு நகரங்களுக்கும் இடையேயான பயண நேரம், 2 மணி நேரமாக குறையும் என்றார். மேலும் கன்னியாகுமரி வரையிலான

கிழக்கு கடற்கரை சாலை திட்டத்திற்கு, 30 ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப் பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

மேலும், 750 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள கரசூர்-சேதராபேட் தொழில் துறை எஸ்டேட்டின் மேம்பாட்டு திட்டம் பற்றியும், பிரதமர் அறிவித்தார். காரைக்காலில் உள்ள என்ஐடியில், ஒருங்கிணைந்த புதிய வளாகம், புதுச்சேரி ஜிப்மர் புற்றுநோய் மையம், மற்றும், பல்கலைக்கழகத்தின் புதிய கட்டடங்களையும் திரு. மோடி திறந்து வைத்தார்.

மத்திய அரசு, மக்கள் நலனை கருத்தில் கொண்டு, சுகாதாரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருவதாக தெரிவித்த திரு. நரேந்திர மோடி, புதுச்சேரியை, மருத்துவ சுற்றுலா மையமாக மாற்ற முடியும் என்றும் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்…..

(வாய்ஸ்-மோடி)

*மோடி புதுச்சேரி 4 (18)*

புதுச்சேரியில் ஆயிரத்து 571.73 கோடி ரூபாய் மதிப்பிலான 74 திட்டங்களுக்கு, பிரதமர் அடிக்கல் நாட்டினார். இவற்றில், கட்டுமானப் பணிகள், கிராமப்புற சாலைகள், கடற்கரை வாழ்விடங்கள், மற்றும், உறுதியான வருமானங்களுக்கான சதுப்பு நில மறு சீரமைப்பு, மின்துறை பணிகள் உள்ளிட்டவை அடங்கும்.

மாநிலங்களுக்கான சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ், 315 கோடி ரூபாய் மதிப்புள்ள 37 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இதில் நகர்ப்புற சாலைகள், வடிகால் வசதிகள், பொது கட்டடங்கள், மாணவர் விடுதிகள், மற்றும், விளையாட்டு வசதிகள் உள்ளிட்டவை அடங்கும். மாநிலங்களுக்கு மட்டுமே வரையறுக்கப் பட்டிருந்த இந்த திட்டங்களில், புதுச்சேரி அரசின் வேண்டுகோளின்படி, மாநிலங்களுக்கான சிறப்பு உதவித் திட்டத்தில் புதுச்சேரியையும் மத்திய அரசு இணைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய முதலமைச்சர் திரு. ரங்கசாமி, பெஸ்ட் புதுவை என்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் விருப்பத்திற்கேற்ப, பல வளர்ச்சித் திட்டங்களை புதுச்சேரிக்கு கொண்டு வந்ததன் மூலம், நாட்டிலேயே சிறந்த மாநிலமாக புதுச்சேரி பெயர் பெற்றுள்ளது என்றும், புதுச்சேரி மக்களின் பல ஆண்டு கோரிக்கையின்படி மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்றும், இதற்கென

*மோடி புதுச்சேரி 5 (8)*

13 முறை சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் திரு. ரங்கசாமி தெரிவித்தார்.

முன்னதாக இன்று காலை, புதுச்சேரிக்கு வந்த பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு அன்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில், மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், சட்டப் பேரவைத் தலைவர் திரு.செல்வம், அமைச்சர்கள், திரு. நமச்சிவாயம், திரு. லட்சுமி நாராயணன், திரு. ஜெயகுமார், திரு. பி.ஆர்.என். திருமுருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---------------------------

*மோடி-மதுரை (11)*

புதுச்சேரி நிகழ்ச்சிகளை தொடர்ந்து இன்று பிற்பகல் மதுரை சென்ற பிரதமர் திரு. நரேந்திர மோடி, கும்பகோணம், ஏற்காடு, மற்றும், வேலூரில், 3 புதிய ஆகாஷ்வாணி எஃப்.எம் ரிலே ட்ரான்ஸ் மீட்டர்கள் உட்பட, 4 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்புள்ள உள்கட்டமைப்பு திட்டங்களை காணொளிக் காட்சி மூலம் தொடக்கி வைத்து, நாட்டிற்கு அர்ப்பணித்தார். வேறு பலத் திட்டங்களுக்கும், அவர் அடிக்கல் நாட்டினார். பின்னர் பேரணி ஒன்றில் உரையாற்றிய பிரதமர், தற்போது தொடங்கப் பட்டுள்ள உள்கட்டமைப்புத் திட்டங்கள், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்றும், லட்சக் கணக்காண மக்களின் வாழ்க்கையை மாற்றும் என்றும்

அவர் கூறினார். பின்னர், முருகப் பெருமானின் முதல் படை வீடான திருப்பரங்குன்றத்தில், பிரதமர் சுவாமி தரிசனம் செய்தார்.

----------------------------

முர்மு (10)

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, நாளை, டெல்லியில் உள்ள இந்திராகாந்தி உள் விளையாட்டு அரங்கில், டெல்லி லக்பதி பித்யா திட்டத்தை, தொடக்கி வைக்கிறார். இத்திட்டத்தின்படி, பெண் குழந்தையின் பெயரில் மொத்தம் 56 ஆயிரம் ரூபாய், படிப்படியாக டெபாசிட் செய்யப்பட்டு, 21 வயதில் முதிர்வுத் தொகை, அப்பெண்ணின் உயர்கல்வி உள்ளிட்ட பயனுள்ள எதிர்காலத் திட்டத்திற்கு வழங்கப்படும் என்று, டெல்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா கூறியுள்ளார். ஆண்டு வருமானம், 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கு மிகாமலும், கடந்த 3 ஆண்டுகளாக டெல்லியில் வசிக்கும் குடும்பத்தை சேர்ந்த பெண் குழந்தைகளுக்கும் இத்திட்டம் பொருந்தும்.

----------------------------

ஈரான் 1 (6)

ஈரான் மீது அமெரிக்க – இஸ்ரேல் கூட்டுப் படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில், ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி கொல்லப் பட்டதாக, அந்நாட்டு அரசு ஊடகம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, மூத்த தலைவர் Ayatollah Alireza Arafi, ஈரானின் இடைக்கால தலைவராக பணியாற்றுவார் என்று அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. இதுகுறித்த கூடுதல் தகவல்கள்.....

(வாய்ஸ்)

ஈரான் 2 (13)

(வாய்ஸ்)

மேற்காசிய நாடுகளில், பதற்றமான சூழல் நிலவுவதை அடுத்து, அங்குள்ள இந்தியர்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு இந்திய தூதரகம் அறிவுறுத்தி உள்ளது. மறு அறிவிப்பு வரும் வரை இஸ்ரேலுக்கு இந்தியர்கள் பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்றும், அறிவுறுத்தப் பட்டுள்ளது. வளைகுடா நாடுகளில் நிலவும் பதற்றமான சூழலை அடுத்து, இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அந்நாடுகளின் தலைவர்களை, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கேட்டுக் கொண்டுள்ளார். வளைகுடா நாடுகளில் வசிக்கும் தமிழர்கள், அவசர உதவி பெற டெல்லி தமிழ்நாடு இல்லத்தில் செயல்படும் கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொள்ளலாம். அதிகரித்து வரும் விசாரணைகளை கருத்தில் கொண்டு, பஹ்ரைனில் உள்ள இந்திய தூதரகம், 973 3840 0433, மற்றும், 973 3941 8071 என்ற அவசர தொலைபேசி எண்களை கூடுதலாக அறிவித்துள்ளது.

---------------------------

விமானப் போக்குவரத்து (6)

மேற்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள புவிசார் அரசியல் மாற்றங்கள் காரணமாக, உள்நாட்டு விமான நிறுவனங்களால் இயக்கப்படும் 350 விமானங்கள், இன்று ரத்து செய்யப்பட்டுள்ளதாக, மத்திய சிவில் விமானப் போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது. பயணிகள், தங்கள் விமான சேவை குறித்த விவரங்களை, அந்தந்த விமான நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு, உதவிகளை பெறலாம் என்றும், அறிவிக்கப் பட்டுள்ளது.

---------------------------

அஸ்வினி வைஷ்ணவ் (8)

செயற்கை நுண்ணறிவு, குறை கடத்திகள், மற்றும், மின்னணு உற்பத்தி ஆகிய துறைகளில், நாடு, அதிவேக வளர்ச்சி அடைந்து வருவதாகவும், மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு.

அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். குஜராத் மாநிலம் காந்தி நகரில், இன்று நடைபெற்ற செமி கனெக்ட் மாநாடு 2026-ன் துவக்க விழாவில், பேசிய அவர், சர்வதேச அளவிலான தொழில்நுட்ப போட்டியில் இந்தியா தற்போது முன்னேறி வருவதாக, தெரிவித்தார். நாட்டில், இந்த ஆண்டு இறுதிக்குள், 3 குறைக் கடத்தி ஆலைகளில் உற்பத்தி தொடங்கப்படும் என்றும், கூறினார்.

---------------------------

*ஜிதேந்திர சிங்* (12)

தேசிய நிர்வாக மாநாடு, நாளை மறுநாள் ஜம்மு-காஷ்மீரில் நடைபெற உள்ளது. இம்மாநாட்டினை மத்திய பணியாளர், பொது குறைகள், மற்றும், ஓய்வூதியத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், அம்மாநில முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லாவுடன் இணைந்து, தொடக்கி வைக்கிறார். நாடு முழுவதிலும் இருந்து, மூத்த நிர்வாகிகள், மற்றும், அதிகாரிகள் உட்பட, 200க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். அனுபவங்கள், மற்றும், கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவும், முதன்மைத் திட்டங்களை நிறைவேற்றும் உத்திகள், மற்றும், துறைகளுக்கு இடையே, ஒருங்கிணைந்த வளர்ச்சி, குறை தீர்க்கும் வழிமுறைகள் குறித்து ஆலோசிக்கவும், இம்மாநாடு ஒரு தளமாக விளங்கும். மாவட்டங்களின் முழுமையான மேம்பாடு, வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான நிர்வாக மாற்றங்கள் என்பதே இம்மாநாட்டின் கருப்பொருளாகும்.

---------------------------

*மனோகர்லால் கட்டார்* (9)

இந்தியா, மின் உற்பத்தியில், மிகைமின் நாடாக உருவெடுத்துள்ளதாக, மத்திய மின்துறை அமைச்சர் திரு. மனோகர்லால் கட்டார் தெரிவித்தார். புதுடெல்லியில், எரிசக்தித் திறன் பணியகத்தின் 25ஆவது நிறுவன நாள் விழாவில் பங்கேற்று பேசிய அவர், நாட்டில்

அதிகரித்து வரும் மின் தேவையை பூர்த்தி செய்ய, அடுத்த 5 ஆண்டுகளில், கூடுதலாக 30 ஜிகாவாட் மின்திறன் தேவைப்படும் என்று கூறினார். பசுமை இல்ல வாயு வெளியேற்றம் தற்போது, 35 சதவிகிதத்திற்கும் மேலாக குறைக்கப் பட்டுள்ளதாக கூறிய அவர், 50 சதவிகித இலக்கை நோக்கி, நாடு, முன்னேறி வருவதாக, கூறினார்.

---------------------------

__மாசிமகம்__ (6)

புதுச்சேரி வில்லியனூரை அடுத்த திருக்காஞ்சியில், நாளை மாசிமகத் தீர்த்தவாரி உற்சவம் நடைபெற உள்ளது. கடந்த மாதம் 21ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கிய மாசிமகத் தீர்த்தவாரி உற்சவம், நாளை மறுநாள் நிறைவடைகிறது. உறுவையாறு, மங்கலம், அரியூர், கரிக்கலாம்பாக்கம், புதுக்கடை, கிளிஞ்சிக்குப்பம் உட்பட, 30க்கும் மேற்பட்ட ஊர்களில் இருந்து, உற்சவ மூர்த்திகள், மாசிமக தீர்த்தவாரியில் கலந்து கொள்கின்றன.

---------------------------

__சூர்யகாந்த்__ (13)

நீதித் துறையின் மீது, மக்களின் நம்பிக்கை மற்றும் மரியாதை தொடர்ந்து உயர்வதற்கு, சரியான நேரத்தில் நீதி வழங்கப்பட வேண்டும் என்று, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் தெரிவித்துள்ளார். ஆந்திர மாநிலம் அருகே, 120 கோடி ரூபாய் செலவில், 16 மாவட்ட நீதிமன்ற வளாகங்களை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் நீதி வழங்கப்படுவது, மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்று குறிப்பிட்ட அவர், நீதிமன்ற அமர்வு மற்றும் வழக்கறிஞர் அமைப்புகள் சேர்ந்த செயல்பட வேண்டும் என்று தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் உச்சநீதிமன்ற நீதிபதிகள், திரு. நரசிம்மா, திரு. பிரஷாந்த் குமார் மிஷ்ரா, திரு. ஜாய் மல்யா பக்க்ஷி, ஆந்திர மாநில

உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. தீரஜ் சிங் தாக்கூர், மற்றும், உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

-----------------------------

<u>கிரிக்கெட் (5)</u>

ஐசிசி ஆடவர் 20 ஓவர் உலகக் கோப்பை சூப்பர் 8 சுற்று கிரிக்கெட் போட்டி, இந்தியா-மேற்கிந்திய தீவு அணிகளுக்கு இடையே தற்போது கொல்கத்தா ஈடன்கார்டன் மைதானத்தில் நடைபெறுகிறது. முதலில் ஆடி வரும் -------------- அணி, சற்று முன்வரை, ------ ஓவர்களில், ------ விக்கெட் இழப்பிற்கு, ------- ரன் எடுத்துள்ளது.

-----------------------------